# பஸீல் காரியப்பரின் கவிதைகள் குறித்த ஒரு சமூகவியல் நோக்கு

**Nusrath banu, M**
Department of sociology. South eastern university of srilanka.
mnusrathbanu1@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:** காலத்தின் கண்ணாடிகளே கவிதைகளாகும். சமூகத்திலுள்ள பிரச்சினைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் பங்களிப்பை கவிதைகள் இங்கிதமாக செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தி விடுகின்றன. அந்த வகையில் பாவலர் பசீல் காரியப்பரின் கவிதைகள் தனித்துவம் வாய்ந்ததாகும். ஆய்வுப் பிரதேசத்தில் பல்வேறு கவிதைத் தொகுப்புகள் நுணுகி ஆராயப்பட்டபோதிலும் பசீல் காரியப்பரின் மேற்குறித்த 'வருத்துவது','இரணக்கோல்','நட்டுமை போகவில்லை' முதலிய விவசாயம் சார் கவிதைகள் சமூகத்தளங்களினால் தனித்துவமாக ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. இவ் ஆய்வு இடைவெளியினைப் பூரணப்படுத்துவதாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறித்த கவிதைகளின் மூலம் கவிஞர் சுட்டிக் காட்டுகின்ற சமூகப் பிரச்சினைகளை சமூகவியல் நோக்கில் ஆராய்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்விற்காக ஆய்வாளனின் அவதானம், இரண்டாம் நிலைத்தரவுகளான சஞ்சிகைகள், கட்டுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் மூலம் கண்டு கொள்ளப்பட்ட விடயம் என்னவெனில் சமூகச்சட்டங்கள், கெடுபிடியான நடவடிக்கைகள் மாத்திரமன்றி இங்கிதமான மொழி மூலமும் சமூகப் பிரச்சினைகளை வெளிச்சமிட்டுக் காட்டமுடியும் என்பதும் விவசாய சமூகத்தில் நிலவுகின்ற குறைபாடுகளை சமூகவியல் கண்ணோட்டத்தில் நோக்கமுடியும் என்பதுமாகும். மொழி எனும் கருவி மூலம் வெளிவரும் சமூகப் பிரச்சினைகளை சிவில் சமூகத்தில் தெளிவான புரிந்துணர்வு மூலம் குறைத்துக் கொள்ளமுடியும் என்றால் மிகையாகாது.

Key Words – விவசாய சமூகம், சமூக அடுக்கமைவு, சமூகப் பிரச்சினை

## அறிமுகம்

இலக்கியங்கள் மனித அனுபவத்தின்வெளிப்பாடுகளாகும். தனி மனித கஷ்டங்களையும்பொது அனுபவங்களையும் அவை பிரதிபலிக்கின்றன. அவ் வகையில் தமிழ்க் கவிதைகளில் அடி நிலைமக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்திய வகையில் பஸீல் காரியப்பரின் கவிதைகளுக்கு தனித்துவமான இடமுண்டு.

நல்ல பல கவிஞர்களும் கவிதைகளும் சில நேரம் சமூகத்திற்குத் தன்னை அடையாளம் காட்டாமல் இல்லை மறையாக இருந்து வருகின்றனர். இது காலப்போக்கில் இலக்கிய வறுமையினை ஏற்படுத்தி விடக் கூடும். எனவே கவிதைகளும் கவிஞர்களும் சமூகத்திற்கு வெளிச்சமிட்டுக் காட்டப்பட வேண்டியவர்கள். அந்த வகையில் பஸீல் காரியப்பர் 40 வருட காலமாக கவிதை புனைவதில் வல்லவராவார். எனினும் அவரது கவிதைகள் ஓர் தொகுப்பாக வெளிவரவில்லை எனும் உறுத்தல் அனேகமானோர் மத்தியில் இருந்துள்ளது.

மணி எனப் பொறுக்கப்பட்ட சுமார் 70 கவிதைகளின் தொகுதியாக ‘ஆத்மாவின் அலைகள்’ சங்கமித்து 1978ல் ‘பாவலர்’ எனும் மகுடம் அவரின் சொந்த ஊரான சம்மாந்துறை மக்களால் சூடப்பட்டது. கலாநிதி நு.ஃமான்கூறுவது போன்று கிராமியம், காதல் உணர்வு, தத்துவ சிந்தனை போன்றவற்றை இவரது கவிதைகளில் காணலாம். மேலும் மனித நேயத்தையும் இவரது கவிதைகளில் காணலாம். மேலும் மனித நேயமே இவரது கவிதைகளின் அடிநாதமாகும்.

புண்பட்ட இதயங்களின் பாத்திரங்களை இவரின் கவிதைகளில் காணலாம். அவர்களுக்கான நியாயம் கோரலும் இங்கிதமான மொழியில் உலாவரும். இவை ‘‘வருத்துவது’’‘‘ஊனக்கலை’’ ‘‘சட்டை’’ ‘‘சிறுக்கி’’ ‘‘தங்கம்மா’’ ‘‘சுடு நீர் விழி மணிகள்’’ இப்படிப்பட்டவையாக இருக்கின்றன். மேலும் பஸீலின் கவிதைகளான ‘‘எனக்கு ஒரு தேவை’’‘‘நம் காதல்’’ ‘‘படப்பிடிப்பு’’ ‘‘அழகான ஒரு சோடிக் கண்கள்’’ முதலியனவற்றில் காதல் சுவை ததும்புவதனைக் காணலாம். சந்தம், ஓசை நயம், எதுகை, மோனை என்பவற்றையும் தாண்டி உள்ளங்களை எழுப்பி விடும் ஓர் சக்தி அவரின் கவிதைகளுக்கு இருப்பதனைக் காணலாம்.

எனவே இத்தகையதோர் கவிஞரின் தொகுப்பில் இருந்து தேர்ந்தெடுத்த சில இரத்தினங்களான ‘‘இரணக் கோல்’’ ‘‘வருத்துவது’’‘‘நட்டுமை போகவில்லை’’ எனும் கவிதைகளை சமூகவியல் தளத்தில் இருந்து ஆய்வு செய்வது இவ் ஆய்வின் தேவையாகும்.

**ஆய்வின் நோக்கம்**

பஸீல் காரியப்பரின் கவிதைகளில் தொணிக்கும் சமூகப் பிரச்சினைகளை சமூகவியலாளர் எனும் வகையில் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வுக்கான தரவுகள் ஆய்வாளனின் அவதானம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளாக புத்தகம், சஞ்சிகை, கட்டுரைகள் மூலம் பெறப்பட்டுள்ளன. குறிப்பாக பசீல் காரியப்பரின் மூன்று கவிதைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

பஸீல் காரியப்பரின் ‘‘வருத்துவது’’ ‘‘இரணக் கோல்’’ ‘‘நட்டுமை போகவில்லை’’ முதலிய கவிதைகளை பின்வருமாறு சமூகவியல் கண்ணோட்டத்தில் நோக்கலாம்.

1. வருத்துவது

வேளாண்மைச் செய்கையில் ‘புல் புடுங்குதல்’ என்பது ஓர் பண்டைய கலாசாரமாகும். இன்றைய உலகில் இதற்கென பல கிருமி நாசினிகள் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலும் வறுமைக்குட்பட்ட பெண்களே இதனை மேற்கொள்வர். பெரும்பாலும் அன்றைய வேலை முடிவில் தமக்குரிய கூலியினைப் பெற்றுக் கொண்டு அப் பெண்கள் வீடு திரும்புவர்.

இத்தகைய பெண் ஒருவருடனான உரையாடலினையே கவிஞர் இங்கு படம் பிடித்துக் காட்டியுள்ளார். அதாவது அப் பெண்ணாளின் கன்னத்தில் வெள்ளிக் காசுகளைப் போல படர்ந்திருந்த தேமலைக்

கண்டு அதனை சுகப்படுத்தக் கூடிய கைமருந்து ஒன்றை கூற முனையும் போது அப் பெண் அவளது வறுமையே வயிற்றை வருத்துவதாகவும் முகத்தேமல் தன்னை வறுத்தவில்லை என்றும் இங்கிதமான மொழியில் கூறி எமது சிந்தனையை தூண்டி விடுகிறாள்.

வறுமை என்றால் என்னவென பல்வேறு வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் உலக வங்கியின் வரைவிலக்கணமே சகலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

"Poverty is hunger, lack of shelter, being sick and not being able to see a doctoer not having access to school, not having job, fear of the future living one day at a time"(World Bank 1990)

இத்தகைய வறுமை நிலையினை சமூகத்தில் சாதாரணமாகக் காணக் கூடியதாக உள்ளது. பெண்கள் பொதுவாக அழகிற்கு அதீதமாக முக்கியத்துவம் கொடுப்பவர்களாவர். அத்தகைய அழகினை இப் பெண் ஒரு பொருட்டாகவே பார்க்கவில்லை. இன்றைய உலகில் உழைக்கும் பணத்தில் பெருந்தொகையினைப் பெண்கள் அழகு சாதனங்களைக் கொண்டு கொள்வனவு செய்வதற்காக உபயோகிக்கும் காலத்தில் இப் பெண்ணின் செயற்பாடு அவளின் வறுமையின் பிடியினை விண்டு காட்டி நிற்கின்றன.

''வருத்துவது எங்களது
வயிறே முகத்தேமல்
உறுத்தவில்லை காக்கா''

வறுமையின் தோற்றம் என்பது ஒரு தனிநபர் சார்ந்த விடயமல்ல. மாறாக அவை ஓர் சமூகப் பிரச்சினையாகும். அதாவது தொழிலின்மை சீதனம் அதிகரித்த வரி நாட்டின் பொருளாதாரப் போக்கின் மாற்றம் விவாகரத்து வீதம் அதிகரித்தல் முதலியனவற்றினால் ஏற்படலாம். இதனால் பெரும்பாலான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள; (Women Headed Family) உருவாகின்றன.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெழும்புக்கு அச்சாணியாக விளங்கும் விவசாய சமூகம் அரச மட்டத்தில் அவசியப்படுவதனை இதன் மூலம் அறிய முடிகின்றது. வறுமையினைக் குறைப்பதற்காக ஜனசவிய, மதிய நேர உணவுத் திட்டம் (1-5ஆம் தர பாடசாலை மாணவர்கள்) உணவு முத்திரைத் திட்டம் போன்றனவும் காணப்படுகின்றன. (சீமஸ் கிளாரி 1991)

இவ்வாறு மக்களை வருத்தும் வறுமையினை கவிஞர் அழகிய மொழியில் கூறுகின்றார். இதற்கென 'மோனை' கவி உத்தியும் செவ்வனே பாவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு பின்வருவனவற்றை ஆதாரமாக்கலாம். நெல் - நெருங்கி புல்- போகின்ற கன்னத்தில்- காசுகளை என்னுள்-ஏன் மருந்து – மறு அறிந்ததனை – ஆவல் மெல்ல – மெதுவாக கொல் - குளுமை வருந்துவது – வயிறே என கவிதை முழுவதும் விரவிக் காணப்படுவதனை நோக்கலாம்.

மேலும் தனது கவிதையில் சில வினாக்களை எழுப்பி எமது மனதுக்குள்ளும் அவ் வினாவுக்கான விடைகள் அலசப்படுகின்றன.

"என்னுள் ஒரு வேதனையை
ஏன் எழுக என்றதுவோ?" எனும் வினாவினை இதற்கு ஆதாரமாக்கலாம்.

பெண்ணின் கன்னத்தில் காணப்படும் தேமலினை 'வெள்ளிக் காசுகளைப் போல' எனக் கூறி உவமை செய்துள்ளார். அத்துடன் கவிஞர் உயிரோட்டமுள்ள மொழியினை உபயோகம் செய்து ஓர் காட்சியை நம் மனக்கண் முன் கொண்டு வந்து வறுமை குறித்த ஓர் செய்தியினையும் கூறி எமது சிந்தனையை கிளரி விடுகின்றார்.

எனவே மேற்கண்டவற்றைத் தொகுத்து நோக்குகின்ற போது வறுமையின் பிடியில் அல்லலுறும் ஓர் பெண்ணின் நிலைப்பாட்டினை கவிதை மொழியில் கவிஞர் கூறுவதனைக் காணலாம். மேலும் வறுமை வருத்துவது அப் பெண்ணின் வயிற்றினை மட்டுமல்ல மாறாக நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் விவசாய சமூகத்தின் எதிர்காலத்தினையும் தான் என்பது மறைமுகமாக பின்புலத்தில் பறைசாட்டப்படுகின்றது என்பதுவும் புலனாகின்றது எனலாம்.

2. இரணக்கோல்

இரணக்கோல் என்பது புராதன காலத்தில் நெற்கதிரில் இருந்து நெல் மணிகளைப் பிரித்து எடுப்பதற்காக பயன்படுத்தப்படும் நீளமான கோலாகும். இதனை பேச்சு வழக்கில் 'கதிரடிக்கும் கம்பு' என்று அழைப்பர். நவீன இயந்திரங்களின் வருகையுடன் இவற்றின் செயற்பாடுகளும் வழக்கொழிந்து போயின.

புராதன விவசாயிகள் அறுவடை முடிந்ததும் ஓர் பெரிய விரிப்பில் அறுவடை செய்த நெல் மணிகளுடனான கதிரைக் கொண்டு குவிப்பர். இப்பெரிய விரிப்பு 'படங்கு'என்று ஊரவர்களால் அழைக்கப்படும். பின்னர் கதிரடிக்கும்கம்பினால் அந்த நெற்கதிர்களுக்கு அடிப்பர். அந்த விசையின் காரணமாக நெல்மணிகள் கதிரில் இருந்து கழன்று விழும். இவ்வாறே ஆரம்பகாலத்தில் நெல் சேமிக்கப்பட்டுள்ளது. மேலும் எஞ்சுகின்ற வைக்கோலினால் கயிறு திரிக்கப்பட்டு அந்த நெல் மணிகளை சுற்றி காவல் படை ஒன்று அமைக்கப்படும். அதற்கு உபயோகப்படுகின்ற வைக்கோலும் இரணக்கோல் மூலமே புராதன விவசாயிகளால் சேகரிக்கப்படுகின்றது.

இந்தக் கவிதையில் இரணக் கோலினை படிமமாக்கி விவசாய சமூகத்தின் உழைப்பினை உறுஞ்சுபவர்களுக்கு எதிரான எதிர்ப்பலைகள் ஓங்குவதனைக் காணலாம். கவிஞர் தனக்கேயுரிய எளிமையான விவசாய மண் வாசனை கமழும் மொழியினால் இக்கவிதையினை ஒப்பனை செய்திருக்கிறார்.

பிறர் உழைப்பில் தங்கி நிற்காமல் தன் கரங்களினையே நம்பி நிற்கும் விவசாயிகளின் நம்பிக்கையினை கவிஞர் பின்வருமாறு கூறுகின்றார்.

"ஏக்கம் மிகுந்த எங்கள்
இரணக் கோல்! கதிரடிக்கும்
கம்புதான் எங்களினைக்
காக்கும்படை; அதுவே
நம்பிக்கை தரும் ஒரு கோல்"

அதாவது தான் செய்யும் தொழிலில் உழவர்களுக்கு இருக்கின்ற பற்றும் பக்தியும் இங்கே தொணிப்பதனைக் காணலாம். நாம் சோற்றில் கை வைப்பதன் பின்னனியில் உழவன் தன் காலை சேற்றில் வைப்பதும் இங்கே புலப்பட்டு விடுகின்றது.

தனது உழைப்பினை சுரண்டுபவர்கள் மீதான எதிர்ப்பொலியினை கவிதையின் ஆரம்பத்தில் காணலாம்.

''காக்கா ! அக்கம்புதனைக்
காலில் மிதிக்காதே
ஏக்கம் மிகுந்த எங்கள்
இரணக்கோல்!.....''

அது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். அதைப்போல் நாளை ஒரு தினம் உழவாளிகளின் உழைப்பைத் திருடுபவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட்டு பழிவாங்கப்படுவார்கள் என்று கால்மாக்சின் வேகம் தொணிக்க இங்கே கவிதை செய்யப்படடிருக்கின்றது.

''நாளை சில பேர்க்குச்

சூட்டுக்கோல் ஆகிடலாம்

சுரணை வருமட்டும் எங்கள்

பாட்டைச் சுரண்டுபவர்

பழிவாங்கப்படுவர்...''

என்று சாதாரண மொழியில் கூறினாலும் மாக்சிச தூரல் இங்கே கவி வரிகளை அழகு செய்கின்றது. இவ்வாறு கூறினும் அடுத்தவர்களில் விவசாயிகளுக்கே உரித்தான நெகிழும் நெஞ்சுடன் சுரண்டும் சுரணை அற்ற வர்க்கம் திருத்தி விடலாம் என்ற அவாவும் கொள்கின்றான்.

''......இந்

நீட்டுக் கோல் அவர்களது

நெஞ்சைத் திருத்திடலாம்....''

இவ்வாறு இளகிய மனம் கொண்ட வர்க்கத்தினர் மேன் மேலும் சுரண்டப்படுவது சமூகவியல் நோக்கில் கண்டிக்கத் தக்க ஓர் சமூகக் குற்றமாகும். மேலும் கவிஞரது இத்தகைய கவிவரிகள் வாசகர்களது நெஞ்சை இரங்க வைத்து விடுகின்றது.

கவிதையின் இறுதி வரிகளில் தம் பாட்டை சுரண்டுபவர்களை நோக்கி அருவருப்புடன் எள்ளி நகையாடி தன் எதிர்ப்பினை விளம்பரம் செய்கின்றார்.

‘‘காட்டாதே பல்லைச் சே!

காசகா உன் கொலை எடு’’

என கூறுவதனைக் காணலாம். எனவே மேற்கொண்டவற்றைத் தொகுத்து நோக்கும் போது உண்மையில் கடினமாக உழைத்து நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் விவசாயிகளே நாட்டின் அபிவிருத்தியின் முதுகெலும்பாகும். அப்படிப்பட்ட மக்கள் இன்னும் வறுமையில் வாடுவது நடுநிலையான ஆய்வாளருக்கு மட்டுமன்றி மனித சமூகத்தினருக்கு ஓர் விடை தெரியாத விளைவாக தொடர்பினைக் காணலாம்.

பொதுவாக கிழக்கிலங்கை மக்கள் விவசாயத்தையே தனது ஜீவனோபாயமாகக் கொள்கின்றனர். இத்தகைய பெருந்தொகை மக்கள் சில முதலாளி முதலைகளால் சுரண்டப்படுவது ஏற்றுக் கொள்ள முடியாத ஓர் பிறழ்வு நடத்தையாகும் (Deliquancy behaviour) எனவே நிலம் உழுது நிலம் காக்கும் நல்லோர்களை நானிலம் போற்ற வாழ்க்கை செய்வதே இன்றைய உலகின் தேவையாகும் என்றால் அது மிகையாகாது எனலாம்.

3. நட்டுமை போகவில்லை

நட்டுமை என்பது நெல்வயலில் தண்ணீர் பாய்ச்சி வரவைகளின் வரம்புகள் கட்டியிருக்கும் போது, நண்டு துளைத்தோ அல்லது எப்படியோ நீர் களவகைச் செல்லும் வழியாகும். இக் கவிதைக்கு ‘‘நட்டுமை போவதில்லை’’ எனும் தலைப்பு சாலப் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது.

அதாவது இயற்கையிலேயே தமது உடலில் இயல்பாகத் தோற்றம் பெறுகின்ற இச்சைகளை நிறைவு செய்து கொள்வதற்காக ஓர் உயிர் திருமணம் எனும் முறையான பந்தம் மூலம் கிடைக்கப் பெற்றிருந்தும் களவாக இன்னுமொரு உறவின் மூலம் தனது ஆசைகளை முறைதவரி தீர்த்துக் கொள்ள முனைவதும், வயலுக்கு தண்ணீர் முறையாக வாய்க்கால் மூலம் பெறப்படினும் நட்டுமையின் ஊடாக முறைதவரி நீரைப் பெற முனையும் நிகழ்வும் இங்கே ஒருமித்த உருவகப்படுத்தப்பட்டிருப்பதானது கவிஞரின் கவிப்புலத்தினை வெளிப்படுத்தி விடுகின்றது.

இக் கவிதையில் ஒரு காட்சியினை கவிஞர் மனக்கண் முன் கொண்டு வருகின்றார். போடியார் வெள்ளாமைக்காரன் வீட்டுக்கு வருவதும், வாசலில் இருப்பதும், வெள்ளாமைக்காரன் பொன்டாட்டியை பார்த்து இச்சைப் படுவதும், இழி சொல் பேசுவதும், நகைப்பதும் பின்னர் அவன் சென்றதும் அப்பெண் தன் கணவனிடம் இவனிடம் தொழில் எமக்கு வேண்டாம் என அங்கலாய்ப்பதுமாக இக் காட்சி தொடர்கின்றது.

விவசாயம் சார் பெண்களிடம் இயல்பாகவே ஓர் இங்கிதம் காணப்படும். இதனைப் பறைசாற்றும் வகையில் அப்பெண்ணின் சில மொழிகளை இங்கே காணலாம். ‘‘ புள்ளட வாப்பா!’’‘‘இஞ்சப்பாருங்க’’ என்பவற்றை ஆதாரமாக்கலாம்.

விவசாய சமூகமானது நாட்டின் அபிவிருத்தியின் அச்சாணியாகும். எனினும் வயற் காணிகளை சொந்த உடமையாக வைத்திருக்கும் போடியார் என அழைக்கப்படும்

வர்க்கத்தினர் இருந்துதான் இருக்கின்றனர். எனினும் தற்காலத்தில் இத்தகைய நிலைமை சற்று அருகிக் கொண்டு வருவதனைக் காணலாம்.

எனினும் முன்னைய காலங்களில் தன் வயலில் வேலை செய்யும் விவசாயி மட்டுமன்றி அவரது குடும்பமே போடியார் குடும்பத்திற்கு அணிவிடை பணிவிடை செய்யும் வர்க்கத்தினராக கணிக்கப்படுகின்றனர். இதனை ஒரு பொருட்டாக சமூகம் கருதுவதுமில்லை. கூலிக்கு வேலை செய்பவன் மதிய நேரங்களில் போடியார் வீட்டுக்குச் சென்று அவனின் மனைவி சொல்லும் வேலைகளினை செய்வான். அதுமட்டுமன்றி கூலியாளனின் மனைவி போடியாரின் வீட்டில் ஏதாவது விசேட நிகழ்வு என்றால் நேர காலத்துடன் அவனின் வீட்டுக்குச் சென்று நெல் அவித்தல், மா இடித்தல், பலகாரம் செய்தல், சமைத்தல், பாத்திரம் சுத்தம் செய்தல் என அனைத்து வேலைகளையும் திண்டாட்டில் செய்யும் வழக்கம் சமூகத்தில் இயல்பாகவே காணப்படும். இது சமூகவியல் ரீதியில் ஓர் சமத்துவமான செயற்பாடாக ஏற்றுக் கொள்ள முடியாத நிகழ்வாகும். ஏனெனில் அப்பெண் அவளது குடும்பத்தினர் செய்யும் வேலைகளுக்காக அவர்கள் சன்மானம் வழங்கப்படுவதில்லை.

இந்நிலை இவ்வாறிருக்க இன்னும் ஒரு படி மேலாக கூலி வேலை செய்கின்ற விவசாயியின் மனைவி மீது போடியார் இச்சை கொண்டு தனது இச்சைக்கு இணங்குமாறு அவளை அழைத்தல் என்பது ஏற்றுக் கொள்ளவே முடியாத ஓர் நிலைப்பாடாகும். இது இறுதியில் விபச்சாரம் (Prostitution) எனும் ஓர் சமூக நோயினை ஏற்படுத்தும் வல்லமை மிக்கதாகும்.

அப் பெண்ணை தனது இச்சைக்கு இணங்குமாறு சாடை மாடையாக போடியார் அழைப்பதனை இவ்வாறு கூறி வருகின்றார்.

‘‘ கொச்சையாக அவன் என்னைப் பார்த்தான்’’

‘‘ இச்சைப்படுகின்றான் போல் என்னில’’

‘‘ அது தான் நாளைக்கு மத்தியானம்

வீட்ட வரட்டாம் ஒரு வேலை இருக்காம்

கள்ளச்சிரிப்பும்’’

சில அப்பாவிப் பெண்கள் தங்களுக்கு தொழில் வழங்கியவன் எனும் எண்ணத்தில் போடியார் சொல்லும் அத்தனை சொல்லுக்கும் தலை அசைப்பார்கள். ஏனெனில் வறுமையின் கொடுமையும், பசியின் பிடியும் கொடூரமானது எனினும் இக் கவிதையில் வலம் வரும் பெண் தன்மானம் மிக்க ஓர் கதாப்பாத்திரமாக உலா வருகின்றாள். இவ்வாறு பாதிக்கப்படும் பெண்களின் பிரதிநிதியாகவே இவளினைக் காணலாம். மேலும் அவளுக்கு போடியார் மீதிருந்த அதீத வெறுப்பினை அவள் உபயோகம் செய்யும் மொழியில் இருந்து காணலாம்.

‘‘ வாசல்ல நிண்டவன் உஞ்சில்ல குந்திட்டான்’’

‘‘ போக்கிரி கிட்ட வெள்ளாம வேணா’’

'' குடலை எடுத்து மாலையாய் போடனும்''

'' இச்சைப்படுகிறான் போல என்னில இந்த இழிச்சவாயன்''

'' கொள்ளையாக் கதைச்சா அந்த ஆள்

கோபம் கண்டால் பத்திக்கு வந்திச்சு''

'' கள்ளச் சிரிப்பும் அவன்ர கால்ல ஒரு சப்பாத்தும் வெள்ளாமைக்காரன் பொன்டாட்டி

என்டா என்ன வேசி என்டா இந்த நாய் நினைச்சான்''

இவ்வாறு போடியாரின் இழிவான செயல், எண்ணம் காரணமாக அவளை அவமதிக்கும் அப்பெண் பிழைப்பை விடவும் தனது கற்பைப் பேணுவதிலேயே அதீத கவனம் கொள்கிறாள். வறுமை, பசி, பட்டினி, துன்பம் என எதற்கும் அவளின் சிரம் பணியவில்லை.

மாறாக தன்மானம் பேணும் தூய்மையான பெண்ணாகவே அவளைக் காணலாம். மேலும் தன் கணவன் இத்தகைய கேவலமான போடியாரிடம் வேலை செய்வதனை விட பிச்சை எடுப்பதனை பெரிதென நினைக்கின்றாள்.

'' புள்ளட வாப்பா ! நமக்கிந்த போட்டியார்கிட்ட இந்த போட்டியார்கிட்ட வெள்ளாம வேணா''

'' பிச்சைக்குப் போனாலும் நமக்கிந்த போட்டியார்கிட்ட வெள்ளாம வேணா''

'' ஊர் ஊராய் சிரட்டை நீட்டி பிச்சைக்குப் போனாலும் அவனுக்கிட்ட இனி பொழைப்பு ஒன்டும் நமக்கு வேணா''

எனும் கவிதை மொழிகளை இதற்கு ஆதாரமாக்கலாம்.

எனவே பெண் என்பவள் அவள் பலவீனமானவள் என்பதற்காகவோ அல்லது கூலிக்கு வேலை செய்யும் விவசாயியின் மனைவி என்பதனால் அவனுக்கு வசதி சமூக அந்தஸ்து குறைவாக கிடைப்பதனாலேயோ அவன் எல்லோருடைய இழி சொல் செயல்களையும் ஏற்றுக் கொண்டு இறுதியில் தலை விதியினை நொந்து கொள்ளத் தேவையில்லை. விதியை மதியால் வெல்ல முடியும் என்பதனையும் தாண்டி ஏன் எம்மால் எமக்கென புது விதியையும் எழுதிக் கொள்ள முடியும் என்றால் போல் அவரது இறுதி வரிகள் நம்பிக்கை ஊட்டுகின்றன.

அதாவது ''வெள்ளாமக் காரன் பொன்டாட்டி என்டா என்ன வேசி என்டா இந்த நாய் நினைச்சான்''

எனும் வரிகளில் அப்பெண்ணிடம் ஏற்றத்தாழ்வு மனப்பான்மையும், விதியை எண்ணி மூலையில் முடங்கும் தன்மையும் இல்லை என்பதும் மாறாக தன்மானமும் தன்நம்பிக்கையும் நிறைவாகப் பெற்ற பெண்ணாகவே எம் கண் முன் அப் பத்தினி உலா வருகின்றாள்.

எனவே, மேற்கண்டவற்றைத் தொகுத்து நோக்குகின்ற போது விவசாய சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் மானம், கற்பு தொடர்பான பிரச்சினைகள் கவிஞரால் வெகுவாக விமர்சிக்கப்படுகின்றது என்பது மட்டுமன்றி அவற்றை துணிவுடன் எதிர்த்து தன்மானம் பேணும் பெண்னை அவர் கனா காண்கின்றார். அதற்காக தனது கவிதையில் காட்சி அமைப்பும் உவமையும் உருவகமும் எதுகையும் மோனையும் ஆங்காங்கே தொனிப்பதைக் காணலாம்.

**முடிவுரை**

எனவே மேற்குறித்த மூன்று கவிதைகளையும் நோக்கும் போது அவை விவசாய நிலத்தின் அடிமட்ட பிரச்சினைகளை வெளிப்படுத்துவதாகவே அமைந்து விடுகின்றன. விவசாய சமூகத்தினர் எதிர்கொள்ளும் அவலங்களை நாவலை வைத்து நோக்கி அதனை வாசகர்கள் விளங்கிக் கொள்ளும் மொழியில் கவிதை செய்யும் கவிஞர்களின் தொழில் பாராட்டத்தக்கதே. இந்த வகையில் பஸீல் காரியப்பரின் கவிதைகள் முதன்மை இடம் வகிக்கின்றன எனலாம்.

சமூகம் என்பது மனிதர்களின் கலவையாகும். இங்குள்ள மனிதர்கள் ஒருவரில் இருந்து ஒருவர் முற்றிலும் மாறுபட்டவர்களாகவே காணப்படுவர். எனினும் ஒரு குறித்த மனிதருக்கு அவர்களின் தகுதிக்கு ஏற்ப மனிதர்களால் மதிக்கப்படுவதும் இன்னும் இன்னும் சிலர் மிதிக்கப்படுவதும் ஏற்க முடியாததாகும். இத்தகைய கருத்து நிலை கவிஞரின் கவிதைகளில் தொனிப்பதனைக் காணலாம்.

பஸீல் காரியப்பரினால் தெளிவாக அடையாளம் காணப்பட்ட சமூகப் பிரச்சினைகள் அதன் உக்கிர நிலையினை அடையும் போது அவை தனிநபர்களை மாத்திரமன்றி இறுதியில் சமூகத்தினையும் சீர்குலைத்து விடுகின்றது. இந் நிலையில் எந்த ஒரு சமூகத்திலும் ஆரோக்கியமான செயற்பாடுகளை எதிர்பார்க்க முடியாது. எனவே, சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் என்பவற்றைப் பேணி மானிட குலம் எழுச்சிக்கான மனித நேயம் பேணும் கவி வரிகளாக பஸீல் காரியப்பரின் மொழிகளை அடையாளம் காட்டலாம்.

## BIBILIOGRAGHY

1) Haralambos, holborn.(2000). Themes and perspectives. Harpercollins. London.
2) The World Bank.(1990). Making Adjustment Work for the poor: A Frame Work for policy Reform in Africa. Manufactured in the United States of America.
3) Priennie Ranatunga.(2000). A Government/Non Government Collabration in Poverty Alleviation- with a Nutrition entry. Gurudeniya.Kandy.

4) Dilenei Gunewardena. (2007). Consumption poverty in srilanka 1985- 2002. Colombo7. Srilanka.

5) Rehman sobhan. (2010). Challenging the injustice of poverty. Mohan cooperative industrial area. New Delhi.

6) Centre for poverty analysis. (2003). Poverty issues in srilanka. University of Colombo.

7) Ronnate asirwatham, prashan thalaysingam. (2004). Poverty and social conflict in srilanka. Karunaratne and sons.

8) றமீஸ் அபூபக்கர். (2018). சமகால சமூகப் பிரச்சினைகள் . ஏக்சிலன்ட் பிரின்ட். சாய்ந்தமருது.

9) சீமாஸ் கிளாரி, ஆர். (1991). உலக வங்கியும் இலங்கையின் வறுமைக் குறைப்பும். இலங்கைக்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம். நெதர்லாந்து.